*Prevention of Selling Sweet-meats, etc., near Schools*

* 187 Q—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it has been brought to the notice of the Government that petty vendors display and sell sweet-meats and coloured ice near Schools which contain pernicious and prohibited colouring matter deleterious to health;

(b) whether any steps have been taken to check this serious menace to the health of the little children; and

(c) if so, the details thereof?

இனிப்புப் பண்டங்கள் முதலியவற்றை பள்ளிகளுக்கருகில்
விற்பதைத் தடை செய்தல்

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறு கடைக்காரர்கள், உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடிய, தடை செய்யப்பட்ட வண்ணப் பொருளைக் கொண்ட இனிப்புப் பண்டங்கள், வண்ண ஐஸ் ஆகியவற்றைப் பள்ளிகளுக்கருகில் வைத்து விற்பனை செய்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(இ) சிறு குழந்தைகளின் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடிய இக்கொடிய தொல்லையைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எவையேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

(உ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) & (உ) பள்ளிகளுக்கருகில் மிட்டாய்கள், வண்ண ஐஸ் விற்பனை செய்பவர்களிடமிருந்து 1954-ஆம் ஆண்டு உணவுப்பொருள் கலப்படச் சட்டத்தின்கீழ், விற்பனைப் பொருள்களின் மாதிரியை அடிக்கடி எடுத்து அவற்றைப் பரிசோதனை செய்து, அவை தீங்கு விளைவிக்கக் கூடியவையும் தடைசெய்யப்பட்டவையுமான நிறமூட்டும் பொருள்களைக் கொண்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அந்த விற்பனையாளர்கள் மீது வழக்குத் தொடர வேண்டும் என்று உணவுப் பொருள் பரிசோதனை அதிகாரிகளுக்குக் கட்டளையிடுமாறு மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநருக்கும், சென்னை மாநகராட்சிப்

பொறுப்பதிகாரிக்கும் அரசு ஆணையிட்டுள்ளது. பள்ளிகளுக்கு அருகில் விற்கப்படும் மிட்டாய்கள், வண்ண ஐஸ் முதலியவை உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடியவையும், தடை செய்யப்பட்டவையுமான நிறமூட்டும் பொருள்களைக் கொண்டிருப்பதால் அவற்றை வாங்கி உண்ணவேண்டாமென்று பள்ளி மாணவர்களுக்கு அறிவுரை கூறவேண்டுமென்று பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அரசு ஆணையிட்டுள்ளது. தின்பண்டங்களைச் சரியான முறையில் மூடப்படாத பாத்திரங்களிலும் வண்டிகளிலும் வைத்து கல்வி நிறுவனங்களுக்கருகில் விற்பனை செய்பவர்களை அவ்வாறு விற்பனை செய்ய அனுமதிக்கக் கூடாது என்ற கட்டளைகள் பிறப்பிக்குமாறு காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, ஐஸ் போன்ற பொருள்களை, சுகாதாரக் குறைவான சூழ்நிலையில் கல்வி நிலையங்களுக்கு அருகாமையில் வியாபாரம் செய்கின்றவர்களைத் தடுப்பதற்கு, பஞ்சாயத்து யூனியன் சுகாதார ஆய்வாளர் அப்படி விற்பவர்களைப் பிடிப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன். இதில் தீவிர நடவடிக்கை எடுக்க அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அரசு ஆணை பிறப்பிக்கும்போது, அது முதலில் மேல் மட்டத்திற்குப் போய்ச் சேருகிறது. பிறகு அங்கிருந்து கீழ் மட்டத்திற்குப் படிப்படியாக அனுப்பப்படுகிறது. இப்படிப் பட்ட ஆணைகள் கீழ் மட்டத்திற்கு வரும் நிலையில் அந்த ஆணையைப் பெறுபவர்கள் மட்டுமின்றி, மக்களிடம் நேரடித் தொடர்பு கொண்டவர்கள், ஒன்றியத் தலைவர்கள் போன்றவர்கள் உடல்நலத்திற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய பண்டங்களைச் சாப்பிடுவதனால் ஏற்படும் ஆபத்துக்களையும் மக்களுக்குச் சுட்டிக்காண்பித்து இந்தத் தவறுகளைத் தடுத்து நிறுத்தலாம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, இப்படி ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு, எவ்வளவு பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடம் இப்போது இல்லை.

## *Family Planning Scheme*

*188. Q—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether any dummy